بسم اللہ الرحمن الرحیم — نحمدہ ونصلی علی رسولہ الکریم — وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5 | இதழ் 21

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

27 ரம்ஜான் 1441 ஹிஜ்ரி கமரி 21 ஹிஜ்ரத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
21 மே 2020

## அல்லாஹ்வின் கட்டளை

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ۝٢٠١

நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையுடன் செயல்படுங்கள். (எதிரிகளை விட அதிகமாகப்) பொறுமையைக் கையாளுங்கள். எல்லைகளைக் கண்காணித்துக் கொள்ளுங்கள். நீங்கள் வெற்றி பெற இறைபக்தியைக் கைக் கொள்ளுங்கள். (3:201)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உடல்நிலை குறிப்பு

15 மே 2020 வெள்ளிக்கிழமை அன்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜுமுஆ குத்பா வழங்கவில்லை. அன்னார் அந்த சந்தர்ப்பத்தில் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஒரு தூதுச் செய்தியை வழங்கினார்கள். அதனை அன்னாரின் தனிச்செயலர் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஜாவீது சாஹிப் அவர்கள் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யாவின் வாயிலாக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: இன்று என்னால் ஜுமுஆ நடத்த முடியாது என்பது எனக்கு வருத்தமாக உள்ளது. ஏனென்றால் சில நாட்களுக்கு முன் வீட்டின் முற்றத்தில் நடந்து சென்றபோது மிதியடியில் (Mat) கால் இடறியதன் காரணமாக தடுமாறிவிட்டன. இதன் காரணமாக உறுதியான பகுதியில் விழுந்ததால் நெற்றி மற்றும் மூக்கில் பரவலான காயம் ஏற்பட்டது. எனவே ஜுமுஆ நடத்துவது கடினமாகும். ஓய்வு எடுக்க வேண்டும் என்பதே மருத்துவர்களின் ஆலோசனையுமாகும். துஆ செய்யுங்கள். அடுத்த ஜுமுஆவில் கலந்து கொள்ளும் வகையில் அல்லாஹ் முழுமையான விரைவான பூரண குணத்தை வழங்குவானாக. இன்ஷா அல்லாஹ்.

மேலும் தற்போது ரமலானின் இறுதி பத்து நடக்கின்றது. இதில் ஜமாஅத்திற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஜமாஅத்தை அனைத்து தீங்குகளிலிருந்தும் காப்பாற்றி தனது பாதுகாப்பில் வைப்பானாக. பாகிஸ்தானில் இன்றைய நாட்களில் அரசியல்வாதிகளும் மீடியாக்களும் ஜமாஅத்தை எதிர்ப்பதில் மிகத் தீவிரமாக உள்ளன. அல்லாஹ் மற்றும் அவனது தூதர் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரால் அரசியல் செய்கின்றனர். அஹ்மதிகளை மிகத் தீவிரமாக இதன் அடிப்படையில் இலக்காக்க முயற்சி செய்கின்றனர்.

அல்லாஹ் அஹ்மதிகளையும் முழு சமுதாயத்தையும் அவர்களின் இந்த விளையாட்டின் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பாப வைப்பானாக. எவ்வாறிருப்பினும் அவர்களின் ஒவ்வொரு தாக்குதலுக்கு பதிலடியாக நமது வேலை துஆ செய்வதும், அல்லாஹ்விற்கு முன்னால் குனிவதும் ஆகும். ரமலானின் இந்த இறுதி பத்தில் முன்பைவிட அதிகமாக அல்லாஹ்வின் முன்னால் குனியுங்கள். பணிவுடன் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ்விடனம் அவனது கருணையையும் அருளையும் வேண்டுங்கள். அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளுக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

இதன் பிறகு மதிப்பிற்குரிய டாக்டர் ஷபீர் பட்டி சாஹிப் அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மருத்துவ அறிக்கையை ஜமாஅத் மக்களுக்கு தெரிவித்தார்கள்.

டாக்டர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஹுஸூர் அவர்கள் விழுந்ததால் நெற்றி மற்றும் முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இறைவனின் குறிப்பான அருளால் இவை அனைத்தும் லேசானவையாக இருந்தன. நெற்றி மற்றும் பிற உறுப்புகளில் எந்த ஆழமான காயமும் ஏற்படவில்லை. சிறிது வீக்கம் இன்னும் உள்ளது. ஆனால் அது சிறிது சிறிதாக குறைந்து வருகின்றது. இன்ஷா அல்லாஹ் முழுமையாக குணமாகிவிடும். ஹுஸூர் அவர்கள் எவ்வித சிரமமின்றி நடக்கின்றார்கள். பொதுவாக நிலை மிக நன்றாக உள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் சில நாட்கள் ஓய்வு எடுங்கள். ஜுமுஆவும் கூட நடத்த வேண்டாம் என பணிவான விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனை ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஜஸாகுமுல்லாஹ்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உடல்நிலை பற்றிய மதிப்பிற்குரிய டாக்டர் ஷபீர் பட்டி சாஹிப் அவர்களின் புதிய அறிக்கை (17 மே 2020 ஞாயிற்றுக்கிழமை)**

அல்லாஹ்வின் அருளால் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் பொதுவான உடல்நிலை இன்று மிகவும் நன்றாக இருந்தது. காயங்களின் வலியும் குறைந்துள்ளது. நெற்றி, மூக்கு மற்றும் முழங்காலில் காயங்கள் மிகவும் திருப்தியளிக்கும் விதமாக குணமடைந்து வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

ஹுஸூர் அவர்கள் கடிதங்களை பார்வையிடுகின்றார்கள். மேலும் அனைத்து ஜமாஅத் உறுப்பினர்களுக்காகவும் துஆவும் செய்கின்றார்கள். நீங்களும் அன்பிற்குரிய எஜமானருக்காக மனவேதனையுடன் துஆக்களை தொடர்ந்து செய்து வாருங்கள். அல்லாஹ் குறிப்பான தனது அருளால் ஹுஸூர் அவர்களுக்கு விரைவாக முழுமையான குணத்தை வழங்குவானாக. அதன் மூலம் ஜமாஅத், அடுத்த ஜுமுஆவில் தமது அன்பிற்குரிய இமாமை காணும் நற்பாக்கியத்தை பெறட்டுமாக.

---

ஜமாஅத் உறுப்பினர்கள் அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் முழுமையாக குணமடைய குறிப்பாக துஆக்கள் செய்து வாருங்கள்.

اَللّٰهُمَّ رَبَّ النَّاسِ اَذْهِبِ الْبَاْسَ اِشْفِ اَنْتَ الشَّافِي لَا شِفَاءَ اِلَّا شِفَاءُكَ شِفَاءً لَا يُغَادِرُ سَقَمًا

இறைவா! மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைப் போக்கிய இவருக்கு குணமளித்திடுவாயாக! நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணமில்லை. நோய் அறவே இல்லாதவாறு குணமளிப்பாயாக.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சைகைதான் செய்தேன். அந்த இரண்டு சிறுவர்களும் மிக வேகமாக செயல்பட்டு எதிரிகளின் அணிகளை வெட்டி சாய்த்தவாறு கண் இமைப்பதற்குள் அங்கு சென்று சேர்ந்தார்கள். மேலும் எந்த அளவுக்கு வேகமாக தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் அபூஜஹிலும் அவனுடன் இருந்தவர்களும் பார்த்த வண்ணமே இருந்து விட்டார்கள். மேலும் அபூஜஹில் மண்ணில் விழுந்து கிடந்தான்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபி ஹஸ்ரத் முஆஸ் பின் ஹாரிஸ் அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**இரண்டு முஸ்லிம் இளைஞர்களின் கைகளினால் காஃபிர்களின் தலைவன் அபூஜஹில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான குறிப்பு**

**கிலாஃபத்திற்கு மிகவும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய, அன்பு செலுத்துக்கூடிய, வீரமிக்க, கலிமாவை பாதுகாக்கக்கூடிய, அல்லாஹ்வின் வழியில் சிறைச்சாலை சென்ற பற்றுணர்வுமிக்க மார்க்கத் தொண்டரும், பாதுகாப்பு துறையின் உறுப்பினருமான மதிப்பிற்குரிய ரானா நயீமுத்தீன் சாஹிப் அவர்களின் வஃபாத் பற்றிய குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஏப்ரல் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று பத்ர் சஹாபாக்களில் ஹஸ்ரத் முஆஸ் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடுவேன். ஹஸ்ரத் மஆஸ் அன்ஸார்களுடைய கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ மாலிக் பின் நஜ்ஜார் பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவர். ஹஸ்ரத் மஆஸ் உடைய தந்தையார் பெயர் ஹாரிஸ் பின் ரிஃபா ஆகும். இவரது தாயார் பெயர் அஃப்ராஹ் பின்த் உபைத் ஆகும். ஹஸ்ரத் முஹப்பிஸ் மற்றும் ஹஸ்ரத் அவ்ஃப் ஆகியோர் இவரது சகோதரர்கள் ஆவர். இந்த மூன்று பேரும் தந்தையுடன் தாயார் பெயராலும் சுட்டிக் காட்டப்பட்டனர். இந்த மூவரையுமே பனூ அஃப்ரா என்றும் கூறப்பட்டது.

ஹஸ்ரத் மஆஸ் மற்றும் அவரது இரு சகோதரர்கள் அஷ்ஃப் மற்றும் ஹஸ்ரத் முஹப்பிஸ் ஆகியோர் பத்ர் போரில் கலந்து கொண்டனர். ஹஸ்ரத் அவ்ஃப் மற்றும் ஹஸ்ரத் முஹப்பிஸ் பத்ர் போரில் ஷஹீதாகி விட்டனர். ஹஸ்ரத் மஆஸ் பிற்காலத்தில் நடந்த எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்.

ஓர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் மஆஸ் பின் ஹாரிஸ், ஹஸ்ரத் ராஃபி பின் மாலிக் ஸுல்கி இருவரும் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களிடம் மக்காவில் ஆரம்பத்திலேயே ஈமான் கொண்டவர்களைச் சார்ந்தவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் மஆஸ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முதலாவது பைஅத் அக்பாவில் பைஅத் செய்த எட்டு பேர்களில் ஒருவர் ஆவார். அதுபோன்று ஹஸ்ரத் மஆஸ் இரண்டாவது பைஅத் அக்பாவிலும் கலந்து கொண்டார். ஹஸ்ரத் முஅம்மர் பின் ஹாரிஸ் மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து மதீனா சென்றடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருக்கும் மஆஸ் பின் ஹாரிஸ் (ரலி) இருவருக்கும் சகோதரத்துவம் ஏற்படுத்தித் தந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 190,191 ஹஸ்ரத் முஆஸ் பின் அல் ஹாரிஸ் பின் ரிஃபாஆ – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 374 ஹஸ்ரத் முஆஸ் பின் அல் ஹாரிஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூஜஹில் உடைய கொலைச் சம்பவத்தைக் கடந்த வருட குத்பாவில் ஓரளவுக்குக் கூறியிருந்தேன்.

(குத்பா ஜுமுஆ 5 ஏப்ரல் 2019 – அல் ஃபஸல் இன்டர்நேஷனல் 26 ஏப்ரல் 2019)

இங்கும் அதனைக் கூறுவேன். அது மிகவும் தேவையாகும். ஏனெனில் அந்தச் சம்பவத்தில் ஹஸ்ரத் மஆஸ் அவர்களுக்கும் தொடர்பு இருந்தது. புகாரியின் அறிவிப்பில் வருகிறது. அதிலிருந்து கூறுவேன். சுருக்கமாகக் கூற முடியாது. புகாரியின் முழு அறிவிப்பையும் படிக்க வேண்டியது வரும்.

ஸாலிஹ் பின் இப்ராஹீம் தமது தந்தைவழிப் பாட்டனார் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் இடமிருந்து அறிவிக்கிறார். அவர் கூறுகிறார்: நான் பத்ர் போரில் அணியில் நின்று கொண்டிருந்தேன். நான் எனது இரு புறமும் பார்த்தேன். சிறிய வயதை உடைய இரு அன்ஸாரி சிறுவர்கள் நிற்கிறார்கள். அந்தோ! எனது இரு புறமும் என்னை விட இளைஞரான திடகாத்திரமானவர் நின்றால் நன்றாக இருந்திருக்குமே? என்று நான் ஏக்கம் கொண்டேன்.

அப்போது அவ்விருவரில் ஒருவர் என்னிடம் கேட்டார். சச்சா, அபூஜஹிலை உங்களுக்குத் தெரியுமா? அப்போது நான் அவனிடம், சகோதரனின் மகனே! தெரியும். அவனிடம் உனக்கு என்ன வேலை உள்ளது? என்றேன். அதற்கு அவர் கூறினார். அவன் (அபூஜஹில்) ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏசிப் பேசுவதாகக் கேள்விப்பட்டேன். எனது உயிர் எவனிடம் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! எவரது முடிவு முதலில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அவர் இறந்து போகும் வரை எனது கண்கள் அவனது கண்களை விட்டு விலகாது என்று கூறினான்.

இதனைக் கேட்டு எனக்கு ஆச்சர்யம் ஏற்பட்டது என்று அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் கூறுகிறார். பிறகு மறுபுறம் நின்ற பையன் என்னைக் கையால் இடித்து, அவனும் அதேபோன்று கேட்டான். சிறிது நேரம் கழிந்திருக்கும். நான் அபூஜஹிலை மக்கள் மத்தியில் சுற்றி வருவதைக் கண்டேன். நான் பாருங்கள்! இதுதான் உங்கள் கூட்டாளி. இவனைப் பற்றி தான் நீங்கள் என்னிடம் கேட்டீர்கள் என்றேன். இதனைக் கேட்டு இருவரும் விரைவாக தமது வாளை எடுத்துக் கொண்டு சென்று அவனை எவ்வளவு வெட்டி விட்டார்கள்

எனில் அங்கே உயிர் அவனை விட்டுப்போகும் அளவுக்கு வெட்டி விட்டனர். பிறகு திரும்பி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து செய்தியைக் கூறினார். அன்னார், உங்களில் எவர் வெட்டினார் என்று கேட்டார்கள். இருவருமே நான்தான் என்று கூறினர். அன்னார் அவர்களிடம், உங்கள் வாளைக் கழுவி விட்டீர்களா? என்று கேட்டார்கள். அவர்கள் இல்லை என்றனர். அன்னார் வாளை வாங்கிப் பார்த்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் இருவருமே அவனை வெட்டியுள்ளீர்கள் என்று கூறினார்கள். அவனது பொருள்கள் மஆஸ் பின் அம்ர் பின் ஜமூக்குக் கிடைக்கும் என்றார்கள். இருவரின் பெயரும் மஆஸ் ஆக இருந்தது. மஆஸ் பின் அஃப்ரா, மஆஸ் பின் அம்ர் பின் ஜமூ ஆகும். இது சஹீஹ் புகாரியின் அறிவிப்பு ஆகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஃபர்ஸ்... ஹதீஸ் எண் 3141)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் போர் நாளன்று கூறினார்கள். அபூஜஹில் நிலைமை என்ன ஆயிற்று? என்று யார் பார்த்து வருவார்கள். ஹஸ்ரத் இப்னு மஸ்வூது சென்று பார்த்தார்கள். அப்ராவுடைய இரு மகன்களான ஹஸ்ரத் மஆஸ், ஹஸ்ரத் முஹப்பிஸ் இருவரும் வாளால் எவ்வளவு வெட்டி விட்டார்கள் எனில் அவன் மரணத்தின் அருகில் சென்று விட்டான்.

ஹஸ்ரத் இப்னு மஸ்வூது கேட்டார். நீர் அபூஜஹில்தானா? பிறகு அபூஜஹில் உடைய தாடியைப் பிடித்தார். அப்போது அபூஜஹில், என்னை விட பெரிய மனிதர் எவரையாவது வெட்டி இருக்கிறீர்களா? அல்லது உங்கள் சமுதாயம் என்னை விட பெரிய மனிதர் எவரையாவது கொன்றிருக்கிறதா? என்று கேட்டான். அஹ்மது பின் யூனுஸ் தமது அறிவிப்பில் கூறுகிறார். அப்துல்லாஹ் பின் மஸ்வூது, நீர்தானா அபூஜஹில்? என்று கேட்டார். இதுவும் புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி பாப் கத்ல் அபீ ஜஹ்ல் ஹதீஸ் எண் 3962)

ஸய்யிது ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் புகாரியின் இந்த அறிவிப்பின் விளக்கவுரையில் எழுதுகிறார்: சில அறிவிப்புகளில் அஃப்ராவின் இரு மகன்கள் முஹப்பிஸ் மற்றும் மஆஸ் ஆகிய இருவரும் சேர்ந்து அபூஜஹிலை மரணத்தின் அருகில் கொண்டு சென்றனர். பிறகு அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவரது தலையை உடலிலிருந்து பிரித்தார் என்று வருகிறது. இது புகாரி கிதாபுல் மகாஸியில் உள்ளது. மஆஸ் பின் அம்ர் மற்றும் மஆஸ் பின் அஃப்ராவுடன் முஹப்பிஸ் பின் அஃப்ராவும் சேர்ந்து தாக்கி இருக்க வேண்டும் என்பதை அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி நம்பத்தகுந்தாகக் கூறுகிறார்.

பத்ர் போரில் அபூஜஹில் கொலையில் யார் யாரெல்லாம் ஈடுபட்டார்கள் என்பதைப் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு விளக்கம் கிடைக்கிறது. இப்னு ஹிஸாம் அல்லாமா இப்னு இஸ்ஹாக் இடமிருந்து அறிவிக்கிறார். மஆஸ் பின் அம்ர் பின் ஜமூ அபூஜஹிலின் காலை வெட்டினார். அதனால் அவன் விழுந்து விட்டான். இக்ரிமா பின் அபூஜஹில் மஆஸ் உடைய கையை வாளால் வெட்டினார். இதனால் கையை தனியாகி விட்டது. முஹப்பிஸ் பின் அஃப்ரா அபூஜஹில் மீது தாக்குதல் தொடுத்தார். இதனால் அவன் கீழே விழுந்தான். அவனது வாழ்வின் சிறு பகுதி எஞ்சியிருந்தது. அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவரது தலையை உடலிலிருந்து பிரித்து எடுத்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஜஹில் கொலை செய்யப்பட்டவர்கள் மத்தியில் மத்தியில் தேடுமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அபூஜஹிலின் தலையை உடலை விட்டுப் பிரித்தபோது தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஜஹிலை இறந்தவர்கள் மத்தியில் தேடுமாறு கட்டளையிட்டிருந்தார்கள். சஹீஹ் முஸ்லிம் அறிவிப்புக்கேற்ப அஃப்ராவின் இரு மகன்களும் அபூஜஹில் மீது தாக்குதல் தொடுத்தனர். எந்த அளவுக்கு எனில் அவன் இறந்து விட்டான்.

அதுபோன்று புகாரியில் பாபு கத்லே அபூஜஹிலில் வருகிறது. இமாம் குர்தபீயின் பார்வையில் அஃப்ராவின் இரு மகன்கள்தான அபூஜஹிலைக் கொன்றார்கள் என்பது ஒரு யூகமாகும். சில அறிவிப்புகளில் மஆஸ் பின் அம்ர் பின் ஜமூவும் சந்தேகத்திற்கு இடமாக உள்ளார். அதாவது மஆஸ் பின் அஃப்ராவுக்குப் பதிலாக மஆஸ் பின் அம்ர் பின் ஜமூதான் இருந்தார். மக்கள் மஆஸ் பின் அஃப்ரா என்று கருதிவிட்டனர். எனவே கூறுகிறார். மஆஸ் பின் அம்ர் பின் ஜமூ, மஆஸ் பின் அஃப்ராவாக கருதப்பட்டு விட்டார்.

அல்லாமா இப்னு இப்னுல் ஜவ்ஸி கூறுகிறார்: மஆஃ பின் ஜமூ அஃப்ராவின் சந்ததிகளில் ஒருவரல்ல. மஆஸ் பின் அஃப்ரா அபூஜஹிலைக் கொன்றவர்களுள் ஒருவராவார். ஒருவேளை மஆஸ் பின் அஃப்ராவின் ஏதாவது சகோதரர் அல்லது சச்சா (சிறிய தந்தையார்) அங்கு இருந்திருக்கலாம். அறிவிப்பில் அஃப்ராவின் இரு மகன்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. அறிவிப்பாளர் தவறுதலாக இரு மகன்களையும் குறிப்பிட்டிருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் அபூ உமர் கூறுகிறார்: அறிவிப்பின்படி அனஸ் பின் மாலிக் உடைய ஹதீஸ் அதிகம் நம்பத்தகுந்தது ஆகும். அதில் வருகிறது. அஃப்ராவின் மகன் அபூஜஹிலைக் கொலை செய்தார். இப்னு தீம் கூறுகிறார்: நம்பத்தகுந்த விஷயமாவது இரு மஆஸ்களும் மஆஸ் பின் அம்ர் பின் ஜமூ மற்றும் மஆஸ் பின் அஃப்ரா இருவரும் தாய்வழி சகோதரர்களாக இருந்தனர். அல்லாமா தாவூதி அஃப்ராவின் இரு மகன்களின் பெயரை ஸஹ்ல் மற்றும் ஸுஹைல் ஆவர். இருவரும் மஆஸ் மற்றும் முஅப்பிஸ் என்று கூறப்பட்டனர் என்கிறார்.

(அம்தத்துல் காரீ தொகுதி 15 பக்கம் 100,101 – பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் அறிவிப்புகளில் மூன்று பேர் கொன்றதாகவும் இரண்டு பேர் கொன்றதாகவும் மஆஸ், மஆஸ் பின் ஹாரிஸ் பற்றியும் குறிப்பு காணப்படுகிறது.

மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் பத்ர் போரின் சம்பவங்களைக் கூறுகிறார்கள்: அதில் அபூஜஹில் உடைய கொலை சம்பவத்தை எழுதுகிறார்கள். அந்தப் போர்களும் கொலைகளால் சூடேறிப்போய் இருந்தது. முஸ்லிம்களின் ஒரு சிறு கூட்டம் இருந்தது. அவர்களோ அதனை விட மூன்று மடங்கு அதிகமாக இருந்தனர். எல்லா விதமாக யுத்த தளவாடங்களுடன் இஸ்லாத்தின் பெயரையும் அடையாளத்தையும் கூட அழித்து விடுவோம் என்று உறுதியுடன் நின்றனர். முஸ்லிம்கள் பாவம் மிகவும் குறைந்த மக்களே இருந்தனர். ஆயுதங்களும் குறைவாகும். ஏழ்மை, நாதியற்ற நிலையில் இருந்தனர். வெளிப்படையான காரணிகளைப் பொறுத்தமட்டில் மக்காவாசிகளின் முன் சில நிமிடங்களில் வேட்டையாடத்தக்கவர்களாக இருந்தனர். ஆனால் ஏகத்துவம் மற்றும் தூதுத்துவத்தின் மீது கொண்ட நேசம்

## திருக்குர்ஆனிலிருந்து...

(சுவர்க்கத்திற்குரிய) அவர்களின் பார்வைகள் நரகத்திற்குரியவர்களின் பக்கம் திருப்பப்படும்போது, அவர்கள் எங்கள் இறைவா! எங்களை அநீதி இழைக்கும் சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக என்று கூறுவர். (7:48)

Faizal Hameed Ilahi, Tittacherry

அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தியிருந்தது. அவர்களிடம் இருந்த உயிருள்ள ஈமான் உடைய சக்தியை விட பெரிய சக்தி உலகில் இருக்கவில்லை. அது அவர்களிடம் அசாதாரணமான சக்தியை நிறைத்திருந்தது. அவர்கள் யுத்தக் களத்தில் மார்க்கச் சேவையின் எத்தகைய முன்னுதாரணம் காட்டினார்கள் எனில் அதற்கு முன்னுதாரணமே இல்லை. ஒவ்வொருவரும் மற்றவிரை விட அடியை முன்னெடுத்து வைத்தனர். இறை வழியில் உயிரைத் தருவதற்கு துடித்தவர்களாக இருந்தனர். ஹம்ஸா, அலி, சுபைர் போன்றவர்கள் எதிரிகளின் அணிகளைப் பிளந்து விட்டனர்.

அன்ஸார்களின் களப்பற்ற தன்மை எவ்வாறிருந்தது எனில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஸ் அறிவிக்கிறார்கள்: பொதுவான யுத்தம் ஆரம்பமானதும் நான் எனது வலமும் இடமும் பார்த்தேன். அன்ஸார்களின் இரு இளைஞர்கள் எனது இருபுறமும் நின்றனர். அவர்களைப் பார்த்து என் உள்ளம் வருந்தியது. இதுபோன்ற யுத்தத்தில் வலமும் இடமும் இருப்பவர்களுக்கு சண்டையில் பெரிய பங்கு இருந்தது. எவரது இருபுறமும் பாதுகாப்பாக இருக்குமோ அவர்தான் நன்றாக யுத்தம் செய்ய முடியும்.

நான் இந்த எண்ணத்தில்தான் இருந்தேன். என்னிடம் அந்த சிறுவர்களில் ஒருவர் மெதுவாகக் கேட்டார். அவர் தான் கேட்டதை மறுபுறம் இருப்பவர் அறியாமல் கேட்க விரும்பியதுபோன்று மெதுவாகக் கேட்டார். சிறிய தந்தையாரே! அபூஜஹில் எங்கே இருக்கிறார்? மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொந்தரவு தந்து கொண்டு இருந்தாராமே? அவர் எங்கே? நான் இறைவனிடம் உடன்படிக்கை செய்துள்ளேன். ஒன்று நான் அவனைக் கொலை செய்வேன். அல்லது அதற்கான முயற்சியில் கொலை செய்யப்படுவேன்.

அப்துல்லாஹ் பின் அவ்ஃப் கூறுகின்றார்: அதற்கு நான் பதில் கூறவில்லை. அதற்கு முன் மறுபுறம் இருந்து மற்ற சிறுவனும் அதுபோன்று கேள்வி கேட்டார். நான் அவர்களின் துணிச்சலைக் கண்டு வியந்து போனேன். ஏனெனில் அபூஜஹில் படைத்தளபதி ஆவார். அவரது நாலாபுறமும் அனுபவமிக்க வீரர்கள் நின்றனர். நான் கையால் சுட்டிக்காட்டிக் கூறினேன். 'அதோ அவன்தான் அபூஜஹில்.'

அப்துர் ரஹ்மான் கூறுகிறார். நான் சுட்டிக்காட்டியதுதான் தாமதம். அந்த இரண்டு சிறுவர்களும் உடனே முன் சென்றனர். அணிகளைப் பிளந்தவாறு நொடிப்பொழுதில் அங்கு சென்று சேர்ந்து எவ்வளவு வேகமாகத் தாக்கி விட்டார்கள் எனில் அபூஜஹில் மற்றும் அவனுடன் இருந்தவர்கள் பார்த்தவாறே இருந்து விட்டனர். அபூஜஹில் மண்ணில் வீழ்ந்தான். இக்ரிமா பின் அபூஜஹில் தந்தையின் அருகில்தான் நின்றார். அவர் தமது தந்தையைப் பாதுகாக்க முடியவில்லை. பின்னாலிருந்து மஆஸை! எவ்வாறு தாக்கினார் எனில் மஆஸின் வலது கரம் அறுந்து தொங்கி விட்டது. அவர் தப்பிச் சென்று விட்டார். பிறகு வெட்டப்பட்ட வலப்பகுதி சண்டையில் இடையூறாக இருந்தது. மஆஸ் அதனை வேகமாக இழுத்து உடலிலிருந்து தனியாக்கி விட்டார். பிறகு சண்டையிட்டார்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 362)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் இந்த சம்பவத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: அபூஜஹில் உடைய பிறப்பு நிகழ்ந்தபோது பல வாரங்கள் வரை ஒட்டகங்கள் அறுக்கப்பட்டு அதன் மாமிசம் பங்கு வைக்கப்பட்டது. அவரது பிறப்பின்போது தப்பறை அடித்து மக்காவின் வீதிகளில் தெரிவிக்கப்பட்டது. பெரிய அளவில் பறை அடிக்கப்பட்டது. அவரது பிறப்பின் மீது பெரும் மகிழ்ச்சி கொண்டாடப்பட்டது. மக்காவின் வானம் வரை சப்தம் எழுந்தது. பிறகு அவர் பத்ர் மைதானத்தில் மரணித்தபோது 15 வயதுடைய இரு அன்ஸாரி சகோதரர்கள் அவனை வீழ்த்தி காயமுறச் செய்தனர்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூறுகிறார்: போர் முடிந்து மக்கள் திரும்பிச் செல்லும்போது நான் மைதானத்தில் காயமுற்றவர்களைக் காணச் சென்றேன். அவரும் மக்காவாசியாக இருந்ததால் அபூஜஹிலை நன்றாக அறிவார்கள். அன்ஸாரி கூறுகிறார்கள். நான் போர்க்களத்தில் சுற்றி வந்து கொண்டிருக்கும்போது என்ன பார்த்தேன் என்றால், அபூஜஹில் காயமுற்றுக் கிடக்கின்றான். நான் அவனிடம் சென்றபோது அவன் என்னிடம், நான் தப்பிக்க வழியில்லை. அதிகக் காயம் ஏற்பட்டு விட்டது. நீரும் மக்கவாசியாவீர். நான் ஒரு விருப்பத்தைத் தெரிவிக்கிறேன். நீர் எனது வேதனை அகலுவதற்காக கொன்று விடுக. நான் அரபுகளின் தலைவர் என்று நீர் அறிவீர். அரபுகளின் வழக்கம் தலைவர்களின் கழுத்தை சற்று உயரமாக இருக்குமாறு வெட்டி வைக்கப்படும். அது கொலை செய்யப்பட்டவரின் தலைமைத்துவத்தைக் காட்டும் அடையாளமாகும். எனது விருப்பம் நீர் என கழுத்தை சற்று நீளமாக இருக்குமாறு வெட்ட வேண்டும் என்று கூறினான்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூறினார்கள். நான் அவனது தலையைச் சற்று சிறிய அளவாக வெட்டினேன். உனது இறுதி ஆசை கூட நிறைவேறாது என்று கூறினேன். இறுதி விளைவைப் பொருத்தமட்டில் அபூஜஹிலின் மரணம் எத்தகைய இழிவான மரணமாக இருந்தது. அவனது கழுத்து எப்போதும் உயர்ந்தே இருந்தது. மரணத்தின்போது அவனது கழுத்து சிறியதாக வெட்டப்பட்டது. அவனது இறுதி ஆசை கூட நிறைவேறவில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 101)

ஹஸ்ரத் ருபய்யிஃ பின்த் முஅவ்விஸ் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. எனது சச்சா மஆஸ் பின் அஃப்ரா எனக்கு சிறிது புத்தம் புதிய பேரீத்தம்கழங்களைத் தந்தார். இதனை ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் கொண்டு தருமாறு கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு நகைகள் வழங்கினார்கள். அது பஹ்ரைனின் ஆட்சியாளர் அன்னாருக்கு வழங்கிய அன்பளிப்பாக இருந்தது.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரிவைய்யி பின்த் முஹப்பிஸ் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. எனது சச்சா ஹஸ்ரத் மஆஸ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஓர் அன்பளிப்பை அனுப்பினார்கள். அதனைக் கொண்டு சென்றபோது அது பஹ்ரைன் உடைய ஆட்சியாளர் அன்னாருக்கு வழங்கியதாக இருந்தது.

அல்லாமா இப்னு அஸீர் எழுதுகிறார்: பஹ்ரைன் உடைய ஆட்சியாளர் மற்றும் மற்ற மன்னர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அன்பளிப்புகளை அனுப்பினார்கள். அப்போது இஸ்லாம் மிகவும் பரவியிருந்தது. அவர்கள் அந்த மன்னர்களுக்கு கடிதம்

## திருக்குர்ஆனிலிருந்து...

(நிராகரிப்பவர்களாகிய) அவர்கள் தங்கள் மார்க்கத்தை நகைப்பிற்குரியதாகவும், விளையாட்டாகவும் ஆக்கிவிட்டனர். மேலும் அவர்களை உலக வாழ்க்கை ஏமாற்றத்திற்குள்ளாக்கி விட்டது. எனவே அவர்கள் நம் அடையாளங்களை மறுப்பதில் உறுதியாக இருந்ததால், தங்களை இந்த நாளைச் சந்திப்பதை மறந்திருப்பதைப் போன்று இன்று நாமும் அவர்களை மறந்து விடுவோம். (7:52)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

அனுப்பி இருந்தார்கள். அன்பளிப்புகளையும் பொருள்களையும் வழங்கினார்கள். அந்த மன்னர்களும் கடிதமும் எழுதி தமது அன்பளிப்புகளை அனுப்பினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 192 ஹஸ்ரத் முஆஸ் பின் அல் ஹாரிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஆஸ் பின் ஹாரிஸ் நான்கு திருமணங்கள் செய்திருந்தார்கள். அதன் விபரம் இவ்வாறாகும். ஹபீபா பின்த் கைஸ். இவர் மூலமாக உபைதுல்லாஹ் என்ற மகன் பிறந்தார். உம்மே ஹாரிஸ் பின்த் சபுரா என்ற மனைவி. இவர் மூலம் ஹாரிஸ், அவ்ஃப், ஸல்மான் அப்துல்லாஹ், ரம்லா பிறந்தனர். உம்மே அப்துல்லாஹ் பின்த் உமைர் ஒரு மனைவி. இவர் மூலம் இப்ராஹீம், ஆயிஷா ஆகியோர் பிறந்தனர். உம்மே ஸாபித் ரம்லா பின்த் ஹாரிஸ் நான்காவது மனைவி ஆவார். இவர் மூலம் சாரா பிறந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 373,374 ஹஸ்ரத் முஆஸ் பின் அல் ஹாரிஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு அஸீர் தமது நூலாகிய அஸதுல் காபாவில் மஆஸ் உடைய மரணம் பற்றி பல்வேறு கூற்றுக்களைப் பதிவு செய்திருக்கிறார். ஒரு கூற்றின்படி மஆஸ் (ரலி) பத்ர் போரில் காயமுற்றார்கள். மதீனா திரும்பிய பிறகு இந்தக் காயத்தினால் வஃபாத் ஆனார்கள். ஒரு கூற்றின்படி உஸ்மான் (ரலி) கிலாஃபத் காலம் வரை உயிருடன் இருந்தார். ஒரு கூற்றின்படி ஹஸ்ரத் அலி (ரலி) உடைய கிலாஃபத் காலம் வரை உயிருடன் இருந்தார்கள். அவரது மரணம் அலி மற்றும் முஆவியாகவுக்கிடையில் நடந்த ஸப்ஃபீன் போரில் நிகழ்ந்தது. ஸஃப்பீன் போர் 35 ஹிஜ்ரியில் நடந்தது. ஹஸ்ரத் மஆஸ் ஹஸ்ரத் அலி சார்பாக போர் செய்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 191 ஹஸ்ரத் முஆஸ் பின் அல் ஹாரிஸ் பின் ரிஃபாஆ – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 1409,1410 ஹஸ்ரத் முஆஸ் பின் அல் கஃப்ரா – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இவரது மரணம் பற்றிய பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. சில அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. இவர்கள் நீண்ட வாழ்நாளைப் பெற்றிருந்தார்கள். இவரது மனைவி மக்களைப் பார்க்கும்போது அது அவர்தான் எனில் அவர் நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தார்கள்.

இந்த சஹாபியின் குறிப்புக்குப் பிறகு நான் கண்ணியத்திற்குரிய ராணா நயீமுத்தீன் சாஹிப் என்ற கண்ணியத்திற்குரிய பிரோஸுத்தீன் முன்ஷி சாஹிபின் மகனைப் பற்றிக் கூறுவேன். இவர்கள் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இவர் சில காலம் நோயுற்றிருந்தார்கள். பல்வேறு நோய்க்காக பலமுறை மருத்துவமனை சென்று வந்தார்கள். இறுதியில் அல்லாஹ் அருள் செய்தான். அவருக்கு நலம் கிடைத்தது. நடந்து செல்ல சக்தி கிடைத்தது. இங்கு பள்ளிக்கு வந்து செல்லவும் செய்தார். எவ்வாறிருப்பினும் இது இவரது உயிரை வாங்கக்கூடிய இறுதி நோயாக நிரூபணமாகி விட்டது. அவர் வ ஃபாத் ஆகிவிட்டார். ராணா சாஹிப் பிறந்தது காகிதங்களின் அடிப்படையை 1934 –ல் ஆகும். சில அறிவிப்புகளின்படி 1930 அல்லது 1932 ஆகும். எவ்வாறிருப்பினும் சான்றிதழ்களின்படி 1934 ஆகும். அந்த வகையில் இவருக்கு வயது 86 ஆகும். இவரது குடும்பத்தில் இவரது தந்தையார் பிரோஸுத்தீன் சாஹிப் மூலம் அஹ்மதிய்யத் வந்தது. இவர் 1906 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கடிதம் மூலம் பைஅத் செய்தார்.

நாடு பிரிவினைக்குப் பிறகு இந்தியா பாகிஸ்தான் என்று பிரிந்த பிறகு இவரது குடும்பம் பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்து விட்டது. முதலில் லாஹூரில் இருந்தது. பிறகு 1948 –ல் ராணா சாஹிப் ரப்வா வந்து விட்டார். பிறகு இவர் பூர்கான் பட்டாலியன் ஆக தம்மை அர்ப்பணித்தார். பூர்கான் பட்டாலியனுக்குப் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ராணா சாஹிபை மீர்பூர்காஸ் அருகிலுள்ள நிலத்திற்கு அனுப்பினார்கள். அங்கு சில வருடங்கள் இருந்தார். இவரது பழைய வஸிய்யத்தில் மிகவும் மூத்தவராக இருந்தார். 1951 –ல் வஸிய்யத் செய்தார். இவருக்கு திருமணம் நடந்தது. மனைவி பெயர் சாரா பர்வீன் ஆகும். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான தவ்லத் கான் சாஹிபுடைய மகன்வழிப் பேத்தியாவார்.

பிறகு இவரது அலுவலக அறிக்கையின்படி இவர் சிறப்புப் பாதுகாப்புப் பணியில் 3 ஆகஸ்டு 1954 –ல் Reserve on Duty ஆக நியமிக்கப்பட்டார். பிறகு 1955 நவம்பரில் இருந்து 11 மே 1959 வரை சிறப்புப் பாதுகாப்புப் பிரிவில் Guard ஆக பணியாற்றினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) விரிவுரை எழுதும் பணிக்காக நக்லா ஜாபாவுக்குச் சென்று வந்தார்கள். அங்கு சென்று பல மாதங்கள் தங்கியிருந்தார்கள். அப்போது இந்த மர்ஹூமை பாதுகாப்பிற்காகவும், ஜெனரேட்டரின் ஆப்பரேட்டராகவும் அழைத்துச் சென்றார்கள். அங்கு மின்சாரம் இருக்கவில்லை. டீசல் ஜெனரேட்டர் செயல்பட்டது. அதனை பராமரித்தார். அங்கு ஒரு சிறு இடத்தில் தங்குமிடம் இருந்தது. அதன் பொறுப்பாளியாகவும் இருந்தார்.

வஸிய்யத் அலுவலக அறிக்கையின்படி 1978 –ல் பாதுகாப்புப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். பிறகு இவர் ஹடப்பா என்ற சாஹ்வால் மாவட்டத்தின் ஓர் ஊருக்குச் சென்றார். பிறகு சாஹ்வால் மஸ்ஜிதில் காதிம் மஸ்ஜிது ஆக சேவை செய்தார். அப்போது அக்டோபர் 1984 –ல் சாஹ்வாலில் உள்ள அஹ்மதிய்யா பைத்துல் திக்ரில், எதிரிகள் தாக்குதல் தொடுத்தனர். அப்போது இவர் அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்ததால் அவர்கள் தாக்குதல் தொடுத்தபோது இவர் அதற்கு பதிலடி தந்தார். அதில் ராணா நயீமுத்தீன் சாஹிபுடன் ஒரு 11 பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது.

ராணா சாஹிபுக்கு 26 அக்டோபர் 1984 முதல் மார்ச் 1994 வரை இறைவழியில் சிறை செல்லும் வாய்ப்பு கிடைத்தது. போலீஸ் தாக்குதல் தொடுத்தவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் ஜமாஅத்தைச் சார்ந்த 11 மக்கள் மீது வழக்கு பதிவு செய்தது. அவர்களுக்கு தண்டனையும் கிடைத்தது. இந்த வழக்கு இராணுவ நீதிமன்றத்திற்கு Refer செய்யப்பட்டது. அது ஒரு சிறப்பு நீதிமன்றமாகும். ஜியாவுல் ஹக் உடைய காலத்தில் 16 பிப்ரவரி 1985 –ல் முறைப்படி விசாரணை தொடங்கியது. 1985 ஜூன் ஒன்றாம் தேதி வரை விசாரணை நடந்தது. அதில் 11 பேர் மட்டுமே இருந்தனர். பிறகு

## திருக்குர்ஆனிலிருந்து...

சுவர்க்கத்திலுள்ளவர்கள் நரகத்திற்குரியவர்களிடம் எங்கள் இறைவன் எங்களிடம் அளித்த வாக்குறுதி உண்மை என நாங்கள் கண்டு கொண்டோம். உங்கள் இறைவன் உங்களுக்கு அளித்த வாக்குறுதி உண்மை என நீங்கள் கண்டீர்களா என்று கூறுவார்கள். இதற்கு அவர்கள் ஆம்! என்பார்கள். (7:45)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

7 பேர் இணைக்கப்பட்டனர். அதில் ராணா நயீமுத்தீன் சாஹிபும் அடங்கியிருந்தார். வெளியே சென்றவர்களின் தீர்ப்பை நிலுவையில் வைத்தார்கள். இருவர் விடுதலை செய்யப்பட்டனர். 7 பேர் மீது வழக்கு நிலுவையில் இருந்தது. அந்த நீதிமன்றம் சிறப்பு நீதிமன்றமாக இருந்தது. அது இயக்க முரப்பியான முனீர் சாஹிப் மற்றும் ராணா நயீமுத்தீன் சாஹிப் இருவருக்கும் மரண தண்டனை வழங்கியது. குற்றம் சாட்டப்பட்ட மீதம் 5 பேருக்கு 25 வருடங்கள் ஒவ்வொருவருக்கும் சிறைத் தண்டனை வழங்கியது.

எவ்வாறிருப்பினும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக முறையிட்டதில் லாஹூர் நீதிமன்றம் மார்ச் 1994 –ல் விடுதலை வழங்கியது. காகிதங்கள் முழுமைப்படுத்தப்பட்டு 19 மார்ச் 1994 –ல் விடுதலை அமலுக்கு வந்தது. இவ்வாறு இவர் ஒன்பதரை ஆண்டுகள் இறைவழியில் கைதியாக சிறைவாசத்தை சகித்துக் கொள்ளும் அந்தச் சிறப்பு கிடைத்தது. எதிரிகளின் தரப்பில் இருந்து இந்த இறைவழி கைதிகளுக்கு எதிரில் உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அதில் மே 2013 –ல் வழக்கு விசாரணை நடந்தது. அதில் இருவர் வெளிநாட்டில் இருந்தனர். வழக்கு நிலுவையில் ஆனது. சிறையில் போலீஸ் சார்பாக கைதிகள் மிகவும் சித்ரவதைக்கு உள்ளானார்கள்.

அவர்களிடம், கலீஃபாவின் மெய்காப்பாளர்களாக இருந்ததால் உங்களிடம் முஸ்லிம்களைக் கொல்லுமாறு கட்டளையிட்டு அனுப்பினார் என்று கூற வைக்க முயற்சி செய்தனர். ராணா நயீமுத்தீன் சாஹிப் இந்த வழக்கில் இருந்து விடுதலையான பிறகு 1994 –ல் இலண்டன் மாற்றமாகி விட்டார்கள். இங்கும் தமது வயதிற்கேற்ப பாதுகாப்புப் பணிகளில் பணி செய்து கொண்டே இருந்தார்கள். 2010 –ல் அவரது மூத்த மகள் வஃபாத் ஆனார். சில நாள்களுக்குப் பிறகு அவரது மனைவியும் வஃபாத் ஆனார்கள். அவர் என்னிடம் கேட்டதற்கிணங்க பாகிஸ்தான் செல்லும் சூழ்நிலை மிகவும் சிக்கலாக இருந்தபோதிலும் இவரை சென்று விட்டு விரைவாக திரும்பி வருமாறு அவருக்கு கூறினேன். அதுபோன்று சென்று விட்டு சில நாட்களில் திரும்பி வந்தார்.

மர்ஹூம் நினைவாக ஒரு மகன் நான்கு மகள்கள் உள்ளனர். இவரது மகன் ராணா வஸீம் அஹ்மது வாழ்வை அர்ப்பணித்தவர். யூ.கே –வின் தனிச்செயலர் அலுவலகத்தில் பணி செய்கிறார். நான்கு பெண்களும் இலண்டனில் தான் இருக்கிறார்கள்.

அவரது மகன் எழுதுகிறார்: எப்போதும் எங்களுக்கு கிலாஃபத்துடன் இணைந்திருக்குமாறு வழிகாட்டினார்கள். அனைத்தும் கிலாஃபத்துடன் சார்ந்தே உள்ளன. அவரும் கிலாஃபத்துடன் ஒன்றியிருந்தார். நான் டியூட்டிக்குச் சென்றால், காலத்தின் கலீஃபாவைப் பார்க்கிறேன். இதுவே எனது ஆரோக்கியத்திற்கு அடிப்படையாகும். இல்லையெனில் நான் படுக்கையில் விழுந்து விடுவேன் என்று கூறுவார். நேரத்தை எப்போதும் கவனத்தில் கொள்வார். எப்போதும் டியூட்டிக்கு ஓரிரு மணி நேரம் முன்னரே தயாராகி விடுவார். தந்தையாரே! இன்னும் நேரம் இருக்கிறதே! என்று கேட்டால் பிறகு என்ன செய்வது? என்பார்.

பிறகு ஒரு டாக்டர் ஹிஷாம் என்பவர் எழுதுகிறார்: இவரது கோப்புகளையும் தாள்களையும் பார்த்து ஆச்சரியமாக உள்ளது. இந்த நோயுடன் இந்த வயதில் மனிதர் வீட்டில் இருப்பார் அல்லது ஓய்வில் இருப்பார் என்கிறார். இவரோ ஓடியாடித் திரிகிறார். மேலும் இவர் நடந்து திரிவதன் இரகசியம் நான் வந்து காலத்தின் கலீஃபாவை காண்கின்றேன். ஆரோக்கியம் பெறுகிறேன் என்று கூறுவார்.

ராணா சாஹிப் என்ற இவரது மகன் கூறுகிறார்: இவருக்கு கால்களைத் தடவி விடுவேன். இவரது காலைத் தடவி விடும்போது முட்டியில் கை வைத்தபோது சிறு சப்தம் வந்தது. என்னவென்று கேட்டபோது ஒன்றும் இல்லை என்றார். நான் பிடிவாதமாகக் கேட்டபோது சிறையில் பட்ட அடியில்தான் இப்படி ஆகிவிட்டது என்று கூறினார். பாகிஸ்தான் சிறையில் அடி கொடுக்கப்பட்டால் மோசமாக அடி தரப்படுகிறது. அனைத்தையும் பொறுத்துக் கொண்டார். வெளியே வந்தும் இவரது பொறுமையின் தகுதி உயர்ந்ததாகும். ஏதாவது உடல்நலக் குறைவு ஏற்பட்டால் எவரிடமும் கூறமாட்டார். பெரும்பாலும் அல்ஹம்துலில்லாஹ் நன்றாக இருக்கிறேன் என்றே கூறுவார்.

கிலாஃபத்திற்குக் கட்டுப்படுதலில் இவரது தகுதி எவ்வாறு இருந்தது? எனில் ஒருமுறை நான் தந்தை அருகில் அமர்ந்திருந்தேன். அவரிடம் எப்போதும் சம்பவங்களைக் கூறுமாறு கேட்பேன். ஒருமுறை கூறினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் நக்லா ஜாபே சென்றிருந்தார்கள். அங்கு தஃப்ஸீர் எழுதச் சென்றார்கள். அப்போது நான் அவருடன் இருந்தேன். அன்னார் அவருடன் இருக்குமாறு கூறினார்கள். ஏதோ ஒரு காரணத்தால் எனக்கு பயம் ஏற்பட்டது. உடனே அன்னார் நீ பள்ளிக்கு சென்று இஸ்திக்ஃபார் செய் என்று கூறினார்கள்.

நான் மஸ்ஜிது சென்றேன். மஸ்ஜிது சிறியது. பச்சை செங்கற்களால் ஆனது. மஸ்ஜிதிற்கு வெளியில் அமர்ந்து இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருந்தேன். திடீரென்று காற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது. நான் அங்கே இருந்தவாறு இஸ்திக்ஃபார் செய்து கொண்டே இருந்தேன். நிறைய நேரம் ஆகிவிட்டது. மஸ்ஜிதில் ஒரு மனிதர் இருந்தார். அவரும் எழுந்து விட்டார். ஹுஸூர் இவர் எங்கே சென்றார்? என்று கேட்டார்கள். சிலர் என்னைத் தேடி பள்ளிக்கு வந்தனர். ஹுஸூர் அழைக்கிறார்கள் என்று கூறினர். நான் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் முன் சென்றேன். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறினார்கள். நீர் உள்ளே தான் இருப்பீர் என்று எனக்குத் தெரியும். நான் உம்மை மன்னித்து விட்டேன் என்று கூறினார்கள்.

பிறகு அவரது மகன் எழுதுகிறார்கள்: இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் தஃப்ஸீர் எழுதிக் கொண்டிருந்த போது தந்தையாருக்கு அருகில் இருந்து பணிவிடை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அதனை மகிழ்ச்சியுடன் கூறி வருவார்கள். அன்னாரது வழக்கம் எப்போதும் மகிழ்ச்சியை எல்லாரிடமும் பகிர்ந்து கொள்வார்கள். கஷ்டத்தை எவரிடமும் கூறமாட்டார்கள். இவரது சிறப்பை கூறுகிறார்.

இவர் மிகவும் கண்ணியமிக்க தந்தை. உண்மையான நண்பர் ஆவார். ராணா வஸீம் தம்மை அர்ப்பணித்தபோது இவரது வக்ஃப் ஒப்புக் கொள்ளப்பட்டதும் இவர் கூறினார். இது ஒரு பெரும் பொறுப்பு ஆகும். எப்போதும் தவ்பா இஸ்திக்ஃபார் செய்தவாறு உனது பணியை ஆற்ற வேண்டும். ஏதாவது துக்கம் யாராவது தந்தால் அமைதியாக இருக்க வேண்டும். விவாதம் செய்யக் கூடாது. எல்லா விஷயத்தையும் இறைவனிடம் விட வேண்டும். பொறுமை செய்ய வேண்டும். பொறுமையின் பாதத்தைக் கை விட்டு விடக் கூடாது. அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். இவ்வாறு ஒரு நண்பன் போன்று போதனை செய்வார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் அவர்களுக்கு (சிறப்புமிக்க) வேதமொன்றை வழங்கியுள்ளோம். நம்பிக்கை கொண்டோருக்கு நேர்வழியும் அருளுமான (நிலையில்) அதனை நாம் ஞானத்தின் அடிப்படையில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளோம். (7:53)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

எனது மனைவி (ராணா சாஹிபின் மருமகள்) இடம் கூட நண்பரைப் போன்று நடப்பார். மகள்களை விட அதிகமாக கனிவுடன் நடந்து கொள்வார். ஒரு சம்பவம் பற்றியும் அவர் என்னிடம் கூறியுள்ளார். ரப்வாவில் அப்பாவுக்கு அம்மாஜான் அருகில் செல்லவும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இவர் எனக்கும் மற்ற உறவினர்களிடமும் போதனை செய்வார். சந்தாவை மிகவும் சரியாகப் பேணி வருவார். முதல் தேதியில் சந்தாவை வழங்கிவிட்டு மற்ற செலவுகளைச் செய்வார். அமைதியாகப் பலருக்கு பொருள் உதவி வழங்குவார். எவரிடமும் அதனைக் கூறவும் மாட்டார்.

இவரது மகள்கள் கூறுகின்றனர்: கிலாஃபத்துடன் தந்தையார் உடைய தொடர்பு எத்தகையது எனில் இவரது ஒவ்வொருநரம்பிலும் கிலாஃபத் மீது அன்பு இருந்தது. எப்போது காலத்தின் கலீஃபா பற்றி பேச்சு வந்தாலும் கண்களில் கண்ணீர் நிறைந்து விடும்.

ஆபீஸருக்கு மரியாதை தருவது குறித்து இவரது ஒரு மகள் எழுதியுள்ளார்: ஒருமுறை சகோதரிகள் எல்லாரும் சேர்ந்து ஹுஸூரை சந்திப்பதற்காக தனிச்செயலல் அலுவலகத்தில் அமர்ந்திருந்தோம். உள்ளே செல்ல வாய்ப்பை எதிர்பார்த்து அமர்ந்திருந்தோம். திடீரென்று தகப்பனார் டியூட்டி நேரத்தில் நிற்பதுபோன்று எழுந்து நின்றார். எங்களுக்கு ஆச்சரியம். என்ன ஆயிற்று? சிறிது தலை உயர்த்திப் பார்த்தபோது சிறப்புப் பாதுகாப்புப் பிரிவினர் உதவி அதிகாரி ஏதோ பணிக்காக அங்கு வந்திருந்தார். அவருக்கு மரியாதை தரும் விதத்தில் எனது தந்தையார் எழுந்து நின்றார். அவர் செல்லும் வரை நின்று கொண்டே இருந்தார். சென்றதும் அமர்ந்தார்.

அவர் கூறுகிறார்: இது சிறிது நிமிடம் நடந்த நிகழ்வாகும். இதனால் எங்களுக்கு நிறைய விஷயங்களைக் கற்றுத் தந்து விட்டார். எமது வாழ்நாள் முழுக்க செய்த போதனை, வாழ்நாளிலிருந்து பயன் பெற வேண்டும் எனில் கிலாஃபத்துடன் காந்தத்தை இரும்பு நெருங்கி இருப்பது போன்று காலத்தின் கலீஃபாவையும் நெருங்கி இருக்க வேண்டும் என்பதாகும். அப்பாஜான் எங்கள் சகோதர சகோதரிகள் நால்வர் மற்றும் பாபிக்கு சில நாள் முன் ஈதி வழங்கினார். அப்போது தாங்கள் அப்பாஜான், ரமலான் ஆரம்பமாகவில்லையே? என்றோம். அப்போது அவர் கூறினார். எனது நேரம் தெரியாது. எனது கடமையை நிறைவேற்றுவதற்கு காலம் தாழ்த்தக் கூடாது என்றார். வஃபாத்திற்கு சில நாட்களுக்கு முன்பு தமது மகள்களுக்கு ஈதியும் தந்து விட்டுச் சென்று விட்டார்.

இவரது மருமகள் கூறுகிறார்: என்னை மிகவும் கவனித்து வந்தார். தந்தை போன்று எனக்கு போதனை செய்து வந்தார். மருமகளின் தந்தையார் வஃபாத் ஆன போது தமது மகனிடம், நீங்கள் கணவன் மனைவி இருவரும் செல்லுங்கள். ஜனாஸாவில் கலந்து கொள்ளுங்கள் என்று கூறினார்.

பிறகு மருமகள் எழுதுகிறார்: இரவில் எனது கண்கள் திறந்தால் இவர் தொழுது கொண்டிருப்பதையே காண்பேன். கிலாஃபத் மீது அளவற்ற அன்பு இருந்தது. எழுதக்கூடிய அனைவரும் இதனை எழுதியிருக்கிறார்கள். பற்று விசுவாசத் தொடர்பு அதிகம். கிலாஃபத்தின் துஆவின் செல்வத்தால் நான் சிறையில் இருந்தேன். கிலாஃபத்தின் துஆவினால்தான் இங்கு வாழ்கிறேன் என்று எப்போதும் கூறி வந்தார். இந்த நாட்டின் தலைவர் அவரது மரணம் சம்பந்தப்பட்ட தாள்களில் கையெழுத்திட்டார். கிலாஃபத்தின் துஆவின் விளைவால் அது எங்கே போனது என்று தெரியாமல் போய் விட்டது. ராணா சாஹிப் உயிருள்ள அடிமையாகி உலகில் முன் வந்து விட்டார்.

இவரது ஒரு மகள் ஆபிதா கூறுகிறார்: எப்போதும் எமது குழந்தைகளுக்குப் போதனை செய்வார்கள். எப்போதும் இறைவன் மற்றும் கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு வையுங்கள். அதில்தான் உங்கள் நிலைப்பு இருக்கிறது என்பார்கள். எப்போதும் திருக்குர்ஆன் ஓதுவதற்கு போதனை செய்வார். தொழுகை மற்றும் தஹஜ்ஜுதில் பேணுதல் உள்ளவராக இருந்தார். எப்போதாவது இவர் தஹஜ்ஜுதை விட்டு விட்டதாகக் காணவில்லை. எமக்காக எப்போதும் துஆவின் கருவூலமாக இருந்தார். விருந்தோம்பலில் அதிகமாக ஈடுபாடு உள்ளவர். நெருங்கிய உறவினர்களைக் கவனத்தில் கொள்வார். ராணா சாஹிப் தமது தந்தை தாய் மற்றும் தமது மனைவியின் வஃபாத்திற்குப் பிறகு அவருக்காகவும் சந்தாவை வழங்கி வந்தார். எப்போதும் ஒரு கவிதையை உரத்த குரலில் கூறி வருவார். "இறைவா! உனது அருள் மற்றும் சோதனை இரண்டிலும் உனது திருப்தியின் கீழ் நாங்கள் திருப்தி கொள்கிறோம்."

இவரது மகள் மேலும் கூறுகிறார்: எங்கள் தாயார் மரணத்திற்குப் பிறகு எங்கள் அனைத்து சகோதரிகளையும் மிகவும் கவனத்தில் கொண்டார். தமது மருமகளிடம் மகள்களை விட அதிக கருணை காட்டினார். ஏதாவது பொருள் கொண்டு வந்தால் முதலில் மருமகளுக்குத் தந்து விட்டுதான் எங்கள் எல்லாருக்கும் தருவார். எப்போதும் கூறி வருவார். ஒருவருடைய மகளை வீட்டிற்குக் கொண்டு வந்தால் அவளை கவனிக்க வேண்டும். இறைவனுக்குப் பதில் சொல்ல வேண்டியதுள்ளது என்று கூறுவார்.

ஒரு மகள் எழுதுகிறார்: இவர் சிறைச்சாலையில் கழித்த நாள்கள் மிகவும் சோதனைமிக்க நாள்களாகும். அதில் இறை திருப்தி, மார்க்க நேசம் கிலாஃபத்தின் நேசம் ஆகியவற்றுடன் காலம் கழித்தார். அவரது வாயிலிருந்து ஒருபோதும் முறையீடு வந்ததில்லை. தொழுகை மற்றும் தஹஜ்ஜுதை ஒருபோதும் தாமதப்படுத்தியதில்லை. எந்தவொரு நோயினாலும் தாமதப்படுத்தியதில்லை. சிறையில் சித்ரவதையின்போது கஷ்டம் ஏற்பட்டதால் இவருக்கு சிறுநீரகத்தில் வலி ஏற்பட்டது. இறுதிக் காலத்தில் அது அதிகமானது. மூச்சு விட சிரமம் இருந்தது. மற்ற சிரமங்களும் உடன் இருந்தன. நாங்கள் அந்த நேரத்திலும் வருத்தம் தொனிக்கும் சொற்களைக் கேட்டதில்லை. எப்போதும் நன்றி அல்ஹம்துலில்லாஹ் தவிர வேறு எந்த வார்த்தையையும் கேட்டதில்லை.

பிறகு அவர் எங்களைக் குறித்து எவ்வளவு யோசித்தார் எனில் எனக்கு 87–88 வயதாகி விட்டது. நான் இறந்து விட்டால் என்னை பாகிஸ்தான் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு மேலும் கூறினார். நான் அனைவருக்கும் டிக்கெட்டிற்குப் பணம் வைத்துள்ளேன். எனது ஜனாஸாவை எடுத்துச் செல்ல உங்கள் கணவர்மார்களை எதிர்பார்க்க வேண்டாம். உங்கள் தந்தையின் செலவில் ஜனாஸாவுடன் செல்லுங்கள் என்றார். ஆனால் இப்போது சூழ்நிலைகளின் காரணத்தால் ஜனாஸா எடுத்துச் செல்ல முடியாமல் போய்விட்டது. வழி கிடைத்தால் இவரது விருப்பத்திற்கேற்ப ஜனாஸா பாகிஸ்தான் எடுத்துச் செல்ல முயற்சி செய்யப்படும்.

இவரது சகோதரி மகன் ராணா சபீர், ரப்வாவின் தாஹிர் ஹார்ட் மருத்துவமனையில் இருக்கிறார். அவர் கூறுகிறார்: சிறையில் இருக்கும்போது பலமுறை அவரை சென்று சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. எப்போதும் சிறையில் பொருள்கள் கொண்டு சென்றால் எங்களுக்கு கஷ்டமாக இருக்கும். அவர் எங்களுக்கு பொறுமை, சகிப்புத்தன்மையைப் போதிப்பார். உயர் தகுதிமிக்க பெரியவர் ஆவார். பெரும் பொறுமைசாலி மனிதர் ஆவார்.

அதுபோன்று இவரது சகோதரர் மகள் கூறுகிறார்: 1980 வரை கிலாஃபத் கோட்டையில் இருந்தார். மாநாடுக்கு செல்லும்போது அஹ்மதி அல்லாதவர் குடும்பத்தினர் உடன் செல்வர். நண்பர்கள் உறவினர்கள் செல்வர். அப்போது எமது பெரிய தந்தையார் இவரது மனைவியின் சகோதரர் மகள் ஆவார். இந்த ரூபினா சாஹிபா

கூறுவார். அவர்களுக்கு உணவு உறக்கம் இவற்றில் எந்தக் குறைவும் இருக்கக் கூடாது என்பார். இடம் குறைவாக இருந்தால் தாம் குழந்தைகளுடன் ஸ்டோர் ரூமில் படுத்துக் கொண்டு நல்ல அறைகளையும் வராண்டாவையும் உறவினர்களிடம் வழங்குவார். இவர்கள் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்கள். இவர்களுக்கு கஷ்டம் ஏற்படக் கூடாது என்று கூறுவார்.

இவரது ஒரு சகோதரி மகன் கூறுகிறார்: நான் இவரை சிறைச்சாலையில் சந்திக்கச் சென்றபோது நலம் விசாரித்தேன். சம்பவம் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினேன். மிகவும் உணர்ச்சிப்பூர்வமாகக் கூறினார். மகனே! எல்லா நிலையிலும் கலிமாவைப் பாதுகாக்க வேண்டும். அதனால் உயிர் போய் விட்டாலும் பரவாயில்லை.

அந்த சகோதரி மகன் கூறுகிறார்: இது ஒரு மனிதரின் வார்த்தை அல்ல. ஒரு மலக்கின் வார்த்தை என்றே தோன்றியது. மிகவும் துணிச்சல், வீரம், கலிமாவைப் பாதுகாப்பவர். கிலாஃபத் மீது பேரன்பு கொண்டவர். தைரியமிக்கவர்.

அவர் கூறுகிறார்: பெல்ஜியத்திலிருந்து இலண்டனுக்கு மாற்றம் ஆனேன். அப்போது அவர் கூறினார். இங்கு வந்துள்ளீர். கிலாஃபத்துடன் நெருங்கி இருக்க வேண்டும். கிலாஃபத்தினால்தான் இங்கு வந்துள்ளீர்கள். கிலாஃபத்தின் ஒவ்வொரு வார்த்தைக்கும் லெப்பைக் கூற வேண்டும். அது அல்லாமல் பயனில்லை. மேலும் கூறினார். முறையாக தொழுகையைப் பேணி வாருங்கள். எப்போதும் மகிழ்ச்சியின் வேளையில் இறைவனிடம் குனியுங்கள் என்றார். இவருக்கு பொய் மற்றும் நயவஞ்சகத்தனத்தின் மீது அதிருப்தி இருந்தது. தமது டியூட்டி பற்றி மிகவும் கவலை கொள்வார். உடல்நிலை சரியில்லை எனில் வீட்டில் உள்ளவர்கள் கூறினாலும் கூட நான் நன்றாக இருக்கிறேன் என்பார். வயதான பிறகு சேவை செய்ய வாய்ப்பு கிடைத்திருப்பது எனது போனஸ் ஆன நாள்களாகும். அதனை செய்ய விடுங்கள் என்பார்.

ரியாஸ் முன்ஷி சாஹிப் சிறையில் உடன் இருந்தார். அவர் கூறுகிறார்: ராணா சாஹிபுடன் எனது வாழ்வின் ஒரு பகுதி கழிந்தது. அவரது இறுதிக் காலத்தில் விடைபெறும்போது அவரைக் காண முடியவில்லை. கஷ்டமாக உள்ளது. ராணா சாஹிபுடன் 10 ஆண்டுகள் சிறையில் கழித்துள்ளேன். ஒருநாளும் அவரை தைரியமிழந்தவராகக் கண்டதில்லை. இராணுவ அதிகாரி சார்பாக அநீதியான முறையில் இவருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது புன்னகையுடன் கேட்டுக் கொண்டார். ஏற்றுக் கொண்டார். பெரிய குடும்பம். சிறு சிறு குழந்தைகள் இருந்தனர். வருமானத்திற்கு எந்த வழியும் இருக்கவில்லை. ஆனால் தவக்குல் இருந்தது. மார்க்கத் தொண்டிற்கான உணர்வு இருந்தது. ஜமாஅத்தின் கண்ணியம் பற்றிய கவலையே இருந்தது. ஏதாவது கஷ்டம் வந்தால் இவர்களின் எண்ணம் ஆபத்தானது. அல்லாஹ்வே பாதுகாப்பான் என்பார். அல்லாஹ்வே அவரது பணிகளை ஏற்றுக் கொண்டான். பிள்ளைகளுக்கு அவர் சிறையில் இருக்கும்போதுதான் திருமணம் நடந்தது.

ரியாஸ் முனீர் சாஹிப் சம்பவங்களைச் சுருக்கமாக எழுதுகிறார்: கலவரக்காரர்கள் மீது தாக்குதல் தொடுத்தபோது கலீமா தய்யிபாவை அழித்து வசனங்களையும் ஹதீஸ்களையும் அழித்து அவமரியாதை செய்தபோது அவரது தோற்றம் எனக்கு மறக்கவே செய்யாது. முதன்முறையாக அவர் மிகவும் கடுகடுத்த குரலில் கூறினார். கலிமாவை அழிக்க நீ யார்? அவர்கள் உருது பேசுவதை நான் முதலில் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால் அப்போது உருதுவில் பேசினார். கடுகடுத்த குரலில் கூறினார். பிறகு தனி ஆளாக 30–40 பேரை தனியாகவே தாக்கினார். முதலில் பள்ளியில் ஒரு மூலையில் ஒளியவும் பிறகு ஓடவும் வைத்தார். இதனை மிகவும் கடுமையாக செய்தார். இன்னும் சொல்வதாயின், போலீஸ் ஆபீஸர் கேட்டார். யார் சுட்டார்கள்? ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் உடனே முன் வந்து நான்தான் என்று கூறினார். பிறகு பல்வேறு மிரட்டல்களுடன் கொடுமைப்படுத்தப்பட்டார். ஜமாஅத் பொறுப்பாளர்கள் பெயரைக் கூற வைக்க விரும்பினர். அவர்கள் கூறித்தான் இப்படி செய்தேன் என்று கூற வைப்பதற்காக முயன்றனர். ஜமாஅத் மீது அணு அளவும் கறை ஏற்படுத்தும் எந்த வார்த்தையையும் கூறவில்லை.

உண்மையில் ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு இவரிடம் சொந்த துப்பாக்கி இருக்கிறது என்பது கூட தெரியாது. பிறகு நீதிமன்றம் மற்றும் சிறப்பு இராணுவ நீதிமன்றத்தின் எந்த அழுத்தத்திற்கும் பணியவில்லை. சொல் மூலமும் செயல் மூலமும் சுய புத்தியுடன் தைரியமாக ஒப்புக் கொண்டார். நான்தான் சுட்டேன் என்றார். அவரது தைரியம் துணிச்சல் இயக்கத்தின் கண்ணியம் மீதுள்ள உணர்வு காரணமாக இறுதி நிலையை இறைவன் நன்றாக்கினான். இறுதி வரை கிலாஃபத்திற்கு அருகில் பணி செய்ய வாய்ப்பு வழங்கினான்.

பிறகு இல்யாஸ் முனீர் சாஹிப் எழுதுகிறார்: இவர் சிறையில் இருக்கும்போது இவரது தந்தைக்கு நான்காவது கலீஃபாவிடமிருந்து கடிதம் வரும். M.T.A –வில் குத்பா வெளிவர ஆரம்பிக்கவில்லை. குத்பாக்கள் எழுத்தில் வெளி வந்தன. அவரது தந்தையிடமிருந்து குத்பா எழுத்து வடிவில் அவருக்கும் வரும். அதனைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். எல்லாரையும் தனித்தனியாக அடைக்கப்பட்டிருக்கும். சிறை திறக்கப்பட்டு எல்லாரும் ஒன்று சேரும் வேளையில் இவர் அந்நேரத்தை குத்பா கேட்கப்பதற்காகவே செலவு செய்வார். தொழுகையை சேர்ந்து தொழ முடிந்தால் சேர்ந்து தொழ ஏற்பாடு செய்வார். சிறையில் உள்ள மற்ற அஹ்மதிகளையும் அழைப்பார். ரமலான் மாதம் ஜூன், ஜூலையில் கடும் வெயிலில் வரும். ராணா சாஹிப் மூத்த வயதினராக இருந்தும் எல்லா நோன்பையும் வைத்து விடுவார்.

அவர் கூறுகிறார்: பெரும் விவேகத்தையும் துணிவையும் காட்டினார். எல்லா நிலைமைகளையும் எதிர்கொண்டார். இவருக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டபோதும் கூட மிகவும் தைரியத்துடன் காலத்தைக் கழித்தார். இந்த தைரியத்தை மற்றவர்களும் உணர்ந்தனர். மரண தண்டனை பற்றிய ஆணையில் கையொப்பம் இடப்பட்ட பிறகு ராணா நயீமுத்தீன் சாஹிபிடம் ஒரு ஜெயில் வார்டன் வந்தார்.

அவர் கூறினார். பாருங்கள்! இந்த மிர்ஸாயி ஓர் ஆச்சரியமான மனிதர். இவருக்கு மரண தண்டனை தேதியும் குறித்தாகி விட்டது. இவர் தமது வாழ்வின் கடைசி பகுதியை அடைந்து விட்டார். இருந்தும் முகத்தில் எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. சிறிதும் அது குறித்து கவலை இல்லை என்று பேச்சை நீட்டிக் கொண்டே சென்றதும், ராணா சாஹிப் கூறினார். நான் புரிந்து கொண்டேன். நான் யார் என்று அவருக்கு தெரியாது. எனவே அவர் பேச்சை முடித்ததும் அவரிடம் ராணா சாஹிப், என் முகத்தில் ஏதாவது கவலையைக் கண்டீர்களா? என்றதும் அவர் இல்லை என்றார். நானும் அஹ்மதி ஆவேன். அவர்களில் ஒருவன் ஆவேன் என்றேன்.

இறுதியில் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய ஒரு கடிதத்தைப் படிக்கிறேன். அது அன்னார் ராணா சாஹிபுக்கு எழுதியது. உங்களுடைய கலப்பற்ற கடிதம் கிடைத்தது. உயர்ந்த ஈமான் மற்றும் உறுதியுள்ள பாறையின் மீது நிற்கிறீர்கள். இது பெருமிதம் கொள்ளத்தக்கது. அல்லாஹ்வை உடையவர்களுக்கு உயரிய தகுதி கிடைக்கும் முன் இதுபோன்ற கஷ்டங்களைச் சகிக்க வேண்டியது ஏற்படுகிறது. உங்களுக்கு கிடைத்த பேறு குறித்து பொறாமை ஏற்படுகிறது. மரம் அதன் பழத்தால் அறியப்படுகிறது.

நீங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மரத்தின் பசுங்கிளைகள் ஆவீர்கள். அல்லாஹ் வீணாக்க மாட்டான். ஜமாஅத் துஆ செய்கிறது. எனது துஆவுடன் நீங்கள் எனது புதிய ஒரு நஸ்ம் கேட்டிருப்பீர்கள். அதில் உங்களைப் போன்று களங்கமற்றவர்களுக்கு தூதுச்செய்தியும் ஸலாமும் உள்ளது. அல்லாஹ் தனது மலக்குகள் மூலம் உதவி செய்வானாக. எதிரிகளின் பிடியிலிருந்து ஈடேற்றம் தருவானாக. அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக. இது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ராணா சாஹிபுக்கு எழுதிய கடிதமாகும்.

முபாரக் சித்தீகி சாஹிப் எழுதுகிறார்: ஒருமுறை நான் அவரிடம் சிறை வாழ்க்கை மற்றும் சிறைத் தண்டனை பற்றி கூறியபோது சிரித்தவாறு கூறினார். அஹ்மதிகளாகிய நமது வாழ்வு கலீஃபாவின் கட்டுப்படுதலுக்கு நாம் அர்ப்பணித்துள்ளோம். எனவே எனக்கு எந்தப் பிரச்சனையும் பிரச்சனையாகத் தெரியவில்லை. அல்லாஹ்வின் திருப்தியின் மீது திருப்தி கொள்வோமாக. நிச்சயமாக அவர் எப்போதும் அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொண்டார். எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் அல்ஹம்துலில்லாஹ் என்று மட்டுமே கூறுவார். மருத்துவமனை சென்று வந்தால் அடுத்த நாள் கூட நன்றாக இருக்கிறேன் என்றும் அத்துடன் எனக்கும் உங்கள் துஆவை தாருங்கள் என்று கூறுவார்.

நான் கூறியதுபோன்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். இந்த நோய் உள்ளவர்கள் கால் வீங்கி வீட்டிலிருந்து வெளியில் வர முடியாது. இவரது நிலையைக் கண்டு ஆச்சரியமாக உள்ளது. டாக்டர்கள் வேண்டுமானால் ஆச்சரியப்படலாம். ஆனால் கிலாஃபத்துடன் உள்ள உணர்வு நேசம் மற்றும் அருகில் இருக்கும் துடிப்பு பள்ளிக்கு இழுத்து வந்து விடுகிறது. டியூட்டிக்கும் இழுத்து வந்து விடுகிறது. இவரது முகத்தில் எப்போதும் நிரந்தரமான நிம்மதியையும் கிலாஃபத்தின் மீதான நேசத்தையும் கண்டேன். அல்லாஹ் இவருக்கு மறுவுலகிலும் அன்பு நேசத்துடன் உள்ள வாழ்வை வழங்குவானாக. தமது நேசத்திற்குரியவர்களுடன் அவர்களின் பாதத்தில் இடம் தருவானாக.

நான் இவரை சிறு வயதில் பார்த்துள்ளேன். ஏற்கனவே கூறியதுபோன்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஜாபா நக்லாவுக்குச் செல்லும்போது நாங்களும் சில நாட்களுக்கு செல்வோம். கோடை காலத்தில் அப்போது கூட இவர் எங்களிடம் மிகவும் கனிவுடன் நடந்து கொள்வார். கிலாஃபத்திற்கு பிறகு இவரது நடைமுறையே முற்றிலும் வேறு. கிலாஃபத்தின் மீதுள்ள உணர்வு நேசம் பற்றிய சம்பவங்களை நாம் கேட்டது போன்று எப்போதும் கண்டு வந்துள்ளேன். இவரது பிள்ளைகளுக்கும் இவரைப் போன்றே பற்றுறுதியின்படி நடக்கச் செய்வானாக. நிலைமைகளின் காரணமாக ஜனாஸா தொழ முடியவில்லை. அரசின் கட்டுப்பாடுகள் உள்ளன. அதற்காக வருந்துகிறேன். இன்ஷா அல்லாஹ் இவரது ஜனாஸா காயிப் தொழுகை நடத்துவேன்.

இறுதியில் தற்போதுள்ள நோய் சம்பந்தமாக கூற விரும்புகிறேன். நமது அஹ்மதி நோயாளிகளும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அவர்களுக்கு அல்லாஹ் முழுமையான விரைவான குணம் நல்குவானாக. நம்மையும் அவனது விருப்பத்தின் வழியில் நடத்துவானாக. உலகிற்கும் அறிவை பகுத்தறிவை வழங்குவானாக. அவர்கள் ஓரிறைவனை கண்டறிவார்களாக. அவனுக்கு இபாதத் செய்வார்களாக. அவர்கள் ஏகத்துவத்தை அறிவார்களாக. அல்லாஹ் அனைவர் மீதும் கருணை காட்டுவானாக.

......☆......☆......☆......

## சதகத்துல் ஃபித்ர் -ன் விகிதாச்சாரம்

அருளுக்குரிய ரமலான் ஏப்ரல் மாதத்தின் இறுதியில் ஆரம்பமாகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தில் ஒரு ஸாஹ் நெல் (அதாவது 2 கிலோ 750 கிராம்) என்ற விகிதாச்சாரத்திற்கேற்ப சதகத்துல் ஃபித்ர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான விகிதாச்சாரப்படி சதகத்துல் ஃபித்ரை அருளுக்குரிய ரமலானின் முதல் பத்திலோ அல்லது இரண்டாம் பத்திலோ செலுத்துவதற்கு ஜமாஅத் சகோதரர்கள் முயற்சி செய்யவும். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கோதுமை, அரிசி ஆகியவற்றின் விகிதாச்சாரம் வேறுபடுவதால் உள்ளூர் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சாரத்தின் படி (2 கிலோ 750 கிராம் நெல்) சதகத்துல் ஃபித்ர் தொகையை செலுத்தவும்.

பஞ்சாப் மாநிலத்தில் இவ்வருடம் ஸதக்கத்துல் ஃபித்ரின் விகிதாச்சாரம் 55 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் ஜமாஅத்தில் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்கள் இருப்பார்களாயின் சதகத்துல் ஃபித்ரின் ஒட்டுமொத்த தொகையில் 90 சதவிகிதம் தொகையை உள்ளூர் செயற்குழுவின் ஆலோசனை மற்றும் முடிவுக்குப் பிறகு விநியோகிக்கலாம். மீதமுள்ள தொகையை தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும்.

எந்த ஜமாஅத்தில் ஏழைகளும், தேவையுடையவர்களும் இல்லையோ அந்நிலையில் அந்த ஜமாஅத்தில் வசூல் செய்யப்பட்ட தொகையை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஜமாஅத்தின் வங்கிக் கணக்கிற்கு அனுப்ப வேண்டும்.

சதகத்துல் ஃபித்ர் தொகையை பள்ளிவாசலின் அத்தியாவசியத் தேவைக்காக செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது என்பதை நினைவில் கொள்ளவும்.

## ஈத் ஃபண்ட்

இந்த சந்தா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இருக்கின்றது. இதன் நோக்கம், மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் மனிதன் தனக்காக ஆடைகள், உணவு மற்றும் விருந்து உபசரிப்பிற்காக பல்வேறு வகையான செலவுகளை செய்கின்றான். மற்றவர்களுக்கு அன்பளிப்பும் கொடுக்கின்றான்.

அதேபோன்று அந்த மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் அவனுக்கு மார்க்கத்தின் குறிக்கோளும் நினைவில் இருக்க வேண்டும். அஹ்மதி உறுப்பினர்கள் பைஅத் உடன்படிக்கையில், உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று உடன்படிக்கை செய்துள்ளனர்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியிடமும் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால், இந்த மகிழ்ச்சிகரமான பண்டிகையின்போது மார்க்கத்தின் குறிக்கோளையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் சம்பாதிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் இதற்காக ஒரு ரூபாய் ஈத் ஃபண்டாக கொடுத்து வந்துள்ளார்கள். தற்காலத்தில் ஒரு ரூபாய்க்கு எந்த மதிப்பும் இல்லை. எனவே உங்களது சக்திக்குட்பட்டவாறு நீங்கள் வழங்குங்கள்.

ஆலோசனை என்னவென்றால், ஈத் நாளன்று எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறதோ அதில் பாதி தொகையை இதற்காக செலுத்தவும். ஈத் பண்ட் தொகையை பெருநாளைக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்.

இது தலைமையகத்திற்குரிய சந்தாவாகும். முழுத் தொகையையும் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா வங்கிக் கணக்கில் செலுத்துவது அவசியமாகும். இந்த தொகையிலிருந்து உள்ளூர் அளவில் செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது.

– நாஸிர் பைத்துல் மால் ஆமத், காதியான்

## அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் ஆழமான பொருத்தங்கள்

தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் புனித ரமலானுக்கும், தஹ்ரீகே ஜதீதிற்கும் இடையிலான ஆழமான பொருத்தங்களைப் பற்றி விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்புகிறீர்கள் என்றால் தஹ்ரீகே ஜதீதின்படி செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிற்கு பயனளிக்க விரும்புகின்றீர்கள் என்றால் நோன்புகளின் மூலமாக சரியான முறையில் பயன் பெறுங்கள். தஹ்ரீகே ஜதீது என்பது என்னவென்றால், சாதாரண வாழ்க்கை வாழ்வதும், கடின உழைப்பு, முயற்சி, தியாகம் ஆகியவற்றிற்கு உங்களை பழக்கமுள்ளவர்களாக ஆக்குவதுமே ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்குக் கற்றுத் தருவதற்காகத்தான் ரமலான் வருகிறது. எனவே எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்ததோ அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்.... ஒவ்வொருவரும், தமது ரமலான் தஹ்ரீகே ஜதீதை கொண்டதாக இருக்க வேண்டும் என முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது மன உணர்ச்சியை அழிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியை அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

எனவே ரமலானிலிருந்து பயன் பெறுங்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் உண்மையில் நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கத்தையும் குறிக்கோளையும் ரமலானின் ஒளியில் புரியுங்கள் என்பதை நான் உங்களுக்கு புரிய வைத்துள்ளேன் என்பதேயாகும். மேலும் தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் நீங்கள் ஒவ்வொரு நிலையிலும் உங்களிடத்தில் தக்க வைத்துக் கொள்ளுங்கள் எனக் கூறியிருக்கிறேன் என்பதேயாகும். மேலும் உங்களிடத்தில் சரியான தியாகத்திற்கான, நிரந்தர தியாகத்திற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகமின்றி சென்று விடுகிறதோ அது ரமலான் அல்ல; மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவின் புத்துணர்ச்சியின்றி சென்று விடுகிறதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல. (ஜுமுஆ பேருரை 04 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது சந்தா செலுத்துபவர்களுக்காக சிறப்பான துஆவுக்கான அறிவிப்பைச் செய்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

ரமலானின் இறுதி பத்து நாட்கள் வரவிருக்கின்றன. இவற்றை தஹ்ரீகே ஜதீது தொடர்பான முந்தைய தியாகங்களுக்கு நன்றி கூறுவதற்காகவும், இனிமேல் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவு செய்யுங்கள். எவர்களுக்கு சென்ற ஆண்டுகளில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்ததோ அவர்கள் அதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். ஒவ்வொரு துஆ செய்பவரும், ஒவ்வொரு தியாகத்தை செய்வதற்காகவும் அல்லாஹ்விடம் துஆ செய்யட்டும். அவர் மார்க்கத்தின் கம்பீரத்திற்காகவும், உறுதிப்பாட்டிற்காகவும் செய்த தியாகங்களின் விளைவாக அல்லாஹ் தனது கருணையையும், அருள்களையும் இறக்குவானாக என்றும் துஆ செய்ய வேண்டும். ஆமீன். (அல் ஃபஸல் பத்திரிகை 15 நவம்பர் 1938 – பக்கம் 4)

29 நவம்பர் 1938 ஆம் ஆண்டு காதியானிலிருந்து வெளிவந்த அல் ஃபஸல் நாளிதழின் அறிவிப்பிற்கேற்ப ஜமாஅத்தைச் சார்ந்த தூய உள்ளம் கெண்டவர்கள் தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் துவக்கத்திலிருந்தே எப்போதும் ரமலான் மாதத்தின் மத்திய நாட்களுக்குள் தமது தஹ்ரீகே ஜதீது சந்தா வாக்குறுதிகளை நூற்றுக்கு நூறு முழுமையாக செலுத்தி அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பதற்கு முயற்சி செய்து வந்ததை வழக்கமாக கொண்டிருந்தனர்.

இப்போது மீண்டும் ஒரு முறை வானத்தின் எண்ணற்ற அருட்கொடைகளைக் கொண்ட இந்த புனித மாதத்தில் நாம் காலெடுத்து வைக்க இருக்கிறோம். எனவே தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களிடம் அனைவரிடமும் கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால், அவர்கள் தமது கண்ணியமிக்க ஜமாஅத்தின் மரபுகளை நிலைநாட்டியவாறு ரமலானின் 20 ஆம் நாளுக்குள் அதாவது மே 14 ஆம் தேதிக்குள் தமது சந்தாவை முழுமையாக செலுத்தி ஹுஸூர் அவர்களின் ஒப்புக் கொள்ளப்படத்தக்க துஆக்களிலிருந்து பெரும் பங்கைப் பெறும் நற்பேற்றைப் பெற வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

அனைத்து மாவட்ட மற்றும் உள்ளூர் அமீர்மார்கள், தலைவர்கள், தஹ்ரீகே ஜதீது செயலர்கள், கொள்கை பரப்பு பிரச்சாரர்கள் ஆகியோரிடமும் கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால், அவர்கள் தத்தமது ஜமாஅத்துகளில் நூறு சதவீதம் சந்தா செலுத்துபவர்களின் பெயர்ப் பட்டியலை மே 14 ஆம் தேதிக்குள் தபால் மூலமாகவும், மே 20 ஆம் தேதிக்குள் தொலை நகல் அல்லது மின்னஞ்சல் மூலமாகவும் வகாலத்தே மால் தஹ்ரீகே ஜதீது காதியான் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும். இதன் மூலம் அனைத்து ஜமாஅத்துகளின் ஒட்டு மொத்த அட்டவணையை ரமலான் 29 ஆம் நாளில் ஹுஸூர் அவர்கள் செய்யும் கூட்டு துஆவிற்காக அனுப்பி வைக்க முடியும். ஜஸாகுமுல்லாஹ்.

வஸ்ஸலாம் எளியவன்

வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது காதியான்

### முக்கிய அறிவிப்பு

### ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது: வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக. (முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

இப்போது எங்களுக்கு புரிந்து விட்டது. நாம் ஒருவர் மற்றவரை நல்ல முறையில் புரிந்திருக்கின்றோம். மேலும் அதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

நான் உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மனித வாழ்க்கை தொடர்பாக எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை மேலும் நீங்கள் நடத்துவீர்கள் என்று நம்புகின்றேன்.

♦ பெல்ஜியத்தைச் சார்ந்த Annie Sels என்ற பெண்மணி இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். அவர்கள் கூறினார்கள்: ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்க பெல்ஜியத்திலிருந்து இங்கு வந்துள்ளேன். அவர்களைக் கண்டு மேலும் அவர்களது கூற்றைக் கேட்டு ஆற்றல் கிடைக்கின்றது. மேலும் (கலீஃபா) அவர்கள் பூமியின் மேற்பரப்பில் அமைதியை விரும்பக்கூடிய நபராவார்கள். அவர்கள் மிகப்பெரிய தலைவராக இருக்கின்றார்கள். இருப்பினும் மிகவும் எளிய சொற்களில் மக்கள் புரியக்கூடிய வகையில் உரையாடுகின்றார்கள்.

எனது விருப்பம் என்னவென்றால், உலகத்திலுள்ள மற்ற வழிகாட்டிகளும் அவர்களிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் உலகம் மிகவும் சுயநலம் விரும்பியாக ஆகிக் கொண்டிருக்கின்றது. மக்கள் ஒருவர் மற்றவரை ஒன்றுமற்றவர்களாக கருதுகின்றனர். மேலும் ஒருவர் மற்றொருவருடன் பேசக்கூட விரும்புவதில்லை.

முழுக்கமிடுவதை மக்கள் சமூக வலைதளங்களிலிருந்து கற்றிருக்கின்றனர். இது சரியல்ல. இதற்கு மாற்றமாக தாங்கள் எவ்வாறு மக்களுக்கு புரிய வைக்கின்றீர்களோ இது மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கக்கூடிய ஒன்றாகும். உலகத்தில் இருக்கின்ற எண்ணற்ற தலைவர்கள் தங்களை பின்பற்றி நடப்பதற்கு தாங்கள் முன்மாதிரியாக திகழ்கின்றீர்கள் என்று நான் கருதுகின்றேன்.

ஹுஸூர் அவர்கள் மிகவும் எளிமையானவர்கள். (அவர்களிடம்) பணிவு உச்ச நிலையில் இருக்கின்றது. (அவர்கள்) உரத்த குரலில் பேசி புரிய வைப்பவர் கிடையாது. மாறாக, அவர்கள் பேசக்கூடிய தொனி மிகவும் மென்மையாகவும், உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இது மிகவும் முக்கியமாகும்.

♦ Dini Harkink சாஹிப் என்ற விருந்தினர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர்கள் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்கள்:

நான் கல்வித்துறையைச் சார்ந்தவன். நான்கு வருடத்திற்கு முன்பாக நான் ஒரு துறையில் டச் மொழியை கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். இங்கு பாகிஸ்தானைச் சார்ந்த ஒரு குடும்பத்துடன் எனது சந்திப்பு நிகழ்ந்தது. அந்த குடும்பத்தினர் ஒரு வருடத்திற்கு முன்புதான் ஹாலந்து வந்திருந்தனர். இவர்கள் மொழியை கற்கக்கூடிய துறையினரிடம் வந்தனர். இவர்களுடனான எனது சந்திப்பு அதிகரித்தது. எல்லா ரீதியிலும் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக நான் உறுதி அளித்தேன். இவர்களது குழந்தைகள் என்னை அடிக்கடி சந்திக்கின்றனர். வாரத்தில் சிறிது நேரம் அவர்கள் என்னுடன் கழிக்கின்றனர். இந்த குழந்தைகளின் மூலமாக உங்களது ஜமாஅத் பற்றி எனக்கு தெரிய வந்தது.

இங்கு வந்து எனக்கு மிகவும் பிடித்திருப்பதைப் போன்று உணர்கின்றேன். ஏனென்றால் உங்களது கலீஃபா அவர்கள் அனைத்து மக்களுக்கிடையிலும் அமைதியைப் பற்றி உரையாடுகின்றார்கள். நான் கிறித்தவன் ஆவேன். ஆனால் உங்களது ஜமாஅத் அஹ்மதிகளுடன் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களுடனுடம் நல்ல முறையில் நடந்து கொள்வதை நான் பார்க்கின்றேன். குறிப்பாக ஒரு முஸ்லிம் வழிகாட்டியிடமிருந்து இத்தகைய விஷயங்களை செவியேற்பது மிகவும் நல்ல விஷயமாகும். ஏனென்றால் இன்றைய நாட்களில் இஸ்லாம் தொடர்பாக மிகவும் தவறான பிம்பமே காணப்படுகின்றது.

உங்களது ஜமாஅத் ஹாலந்து சமூகத்தில் ஒருவர் மற்றொருவருடன் நல்ல முறையில் நடப்பதன் பக்கம் உறுதி பூண்டுள்ளது. இத்தகைய ஜமாஅத்தின் அன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தி சமூகத்திற்கு மிகவும் அவசியமாகும். நீங்கள் அன்பின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நாம் அனைவரும் அன்பை பரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். ஏனென்றால் நாம் அன்பை பரப்பினால் பிறகு அது ஹாலந்து மற்றும் உலகத்திற்கு சிறந்ததாக இருக்கும்.

கலீஃபாவிடம் அன்பு மற்றும் நிம்மதி தென்படுகின்றது. அவர்கள் மிகவும் சிறப்பானவர் ஆவார்கள். அவர்கள் உலகத்தில் பரவி இருக்கின்ற நிம்மதியற்ற நிலையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். பிறகு அமைதியின் தேவை குறித்து அழுத்தம் கொடுத்தார்கள். நாம் பூமியில் ஒருவர் மற்றொருவருடன் இணைந்து இருக்கின்றோம். நாம் ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்றாக இணைந்து பணி செய்ய வேண்டும். என்னை இந்த நிகழ்ச்சியில் அழைத்ததற்கு மிக்க நன்றி. எனது நல்ல விருப்பங்கள் உங்களுடன் இருக்கின்றது.

(உருது பத்ர், 31 அக்டோபர் & 7 நவம்பர் 2019 – தொடரும்...)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## திருக்குர்ஆனிலிருந்து...

அந்த ஊர்களில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் நம்பிக்கை கொண்டு (இறை) அச்சத்தை மேற்கொண்டிருந்தால், நாம் வானங்களிலிருந்தும், பூமியிலிருந்தும் அவர்கள் மீது அருள்களின் வாயில்களைத் திறந்திருப்போம். ஆனால் அவர்கள் (நபிமார்களைப்) பொய்ப்படுத்தினர். எனவே நாம் அவர்களை அவர்களது செயல்களின் காரணமாகத் தண்டனையைக் கொண்டு பிடித்தோம். (7:97)

A.Basheer Ahmad, Melapalayam

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் உங்கள் இறைவனைப் பணிவாகவும், மறைமுகமாகவும் அழையுங்கள். அவன் எல்லை மீறி நடப்பவர்களை நேசிப்பதில்லை. மேலும் பூமியில் அதைச் சீர்திருத்திய பின்னர் குழப்பம் செய்யாதீர்கள். (இறைவனாகிய) அவனை அச்சத்துடனும், மிக்க ஆசையுடனும் அழையுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்பவர்களுக்கு அருகில் உள்ளது. (7:56,57)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 21 May 2020 Issue No. 21

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

## ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

♦ Siros Raja Jugde என்ற விருந்தினர் தமது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தி மிகவும் அமைதி நிறைந்ததாகும். மேலும் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். மாநாடு மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து ஏற்பாடுகளையும் கண்டு எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டுள்ளது.

♦ மராகஷைச் சார்ந்த, பெல்ஜியத்தில் வசித்து வருகின்ற தவ்ஃபீக் ஜாமாதி சாஹிப் என்ற ஒரு புதிய அஹ்மதி நண்பர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: ஹுஸூர் அவர்களை பார்க்க வேண்டும். மேலும் ஹுஸூர் அவர்களுக்குப் பின்னால் நின்று தொழ வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவின் ஒவ்வொரு வார்த்தைகளும் எனது உள்ளம் வரை சென்றடைந்தது. ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிகளை எடுத்துக் கூறி இஸ்லாத்தின் உண்மையான பிம்பத்தை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டினார்கள். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு எங்களிடத்தில் ஒரு புதிய உயிரை ஏற்படுத்தியது.

♦ பெல்ஜியத்திலிருந்து மேலும் இரண்டு புதிய அஹ்மதிகள் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர், மராகஷைச் சார்ந்த ஷேக் ஹஸன் சாஹிப் ஆவார். மற்றொருவர், ஜஸாயிரைச் சார்ந்த பஷீர் சாஹிப் ஆவார்கள். இவர்கள் இருவரும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இவர்கள் சில குழப்பவாதிகளின் காரணமாக ஜமாஅத்தை விட்டு மெது வெதுவாக விலகிக் கொண்டிருந்தனர். இவர்கள் ஜமாஅத்தின் வாட்ஸ்அப் குரூப்பிலிருந்தும் வெளியேறி விட்டார்கள்.

ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு இவர்கள் இருவரும் வெளிப்படையாக இவ்வாறு கூறினர்: ஜமாஅத்தை விட்டும், கிலாஃபத்தை விட்டும் நாங்கள் விலகிச் சென்று மிகப்பெரிய தவறை செய்து விட்டோம். நாங்கள் இந்த எண்ணத்தை விட்டு விடுவோம்.

அவர்கள் கூறினர்: எங்கள் இருவரையும் மீண்டும் ஜமாஅத்தின் வாட்ஸ்அப் குரூப்பில் இணைத்துக் கொள்ளவும்.

♦ டச் மொழி பேசக்கூடிய கணவன் மனைவியாகிய Faith மற்றும் Gisele ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இவர்கள் தமது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றனர்: மாநாட்டில் அனைத்து மக்களும் மிகவும் மகிழ்ச்சிகரமான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தக்க கூடியவர்களாக இருந்தனர். சொர்க்கத்தைப் போன்ற ஒரு சூழல் இன்று நிலவியது. கலீஃபாவின் சொற்பொழிவு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. உங்களது மொழிபெயர்ப்பாளர்களும் எங்களை மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கினார்கள். அவர்கள் மிகவும் சிறந்த முறையிலும், உடனுக்குடனும் மொழியாக்கம் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

♦ Nunspeet நகரத்தின் மேயர் Van der Weert என்பவர் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: Nunspeet மக்கள் சார்பாக இங்கு சில வார்த்தைகளை கூறுவதற்காக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டும் நான் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தேன். இந்த முறை ஹுஸூர் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் இந்த நிகழ்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடந்த ஆண்டைப் போன்று இந்த வருடமும் உங்களது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஹுஸூர் அவர்கள் மிகவும் உயர் தரமான ஆங்கில மொழியில் சொற்பொழிவாற்றினார்கள். என்னைப் போன்றவர்கள் அதனைப் புரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாகும். எனினும் இங்கு நான் எனது கண்களால் பார்த்து உணர்ந்தவற்றை வார்த்தைகளில் எடுத்துக் கூற முடியாது. ஒரு பெரிய ஹாலில் மிகவும் கவனத்துடன் ஹுஸூர் அவர்களின் கூற்றை மக்கள் செவியுற்றனர். இன்றைய நாட்களின் சூழலில் நாம் நமது வாழ்க்கையை புரிந்து கொள்வது அவசியமாகும்.

ஒருவர் கிருத்தவராகவோ அல்லது முஸ்லிமாகவோ இருப்பதில் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தப் போவதில்லை. நாம் படைக்கப்பட்டதன் காரணத்தை அறிய முற்பட வேண்டும். மேலும் அதனை புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று அத்தகைய விஷயங்களை நாம் புரிந்து கொள்ள முடியும். ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தி மிகவும் விலை மதிக்கத்தக்க தூதுச் செய்தியாகும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சமூகத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றது. Municipality Administrator என்ற முறையில் இங்கு அஹ்மதிகளுடன் எனக்கு நல்ல தொடர்பு இருக்கின்றது. நாம் விரும்பும்போது ஒருவர் மற்றவரை சந்திக்க முடியும். அதன் பலனும் இருக்கின்றது. தேவைப்படும்போது நாம் ஒருவர் மற்றவரை அழைக்கின்றோம். இன்றைய நிகழ்ச்சியில் Municipality அமைப்பாளர்களின் பங்களிப்பும் உள்ளது. இங்கு உங்களது பிரதிநிதிகளும், எங்களது பிரதிநிதிகளும் இணைந்து திட்டம் வகுப்போம். சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

### திருக்குர்ஆனிலிருந்து...

ஏதாவதொரு ஊருக்கு நாம் ஒரு தூதரை அனுப்பினால் அதில் வாழ்பவர்கள் பணிவை மேற்கொள்வதற்காகத் துன்பத்தையும் துயரத்தையும் கொண்டு அவர்களைப் பிடித்திருந்தோம். **(7:95)**

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad